| | | |
|---|---|---|
| சாட்சி : DW 1<br>திரு.குழந்தை<br>த.பெ. திரு. பெரியசாமி | அ.வ.எண்.72/2018 | 16.02.2026 |

<u>வாதி தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி</u>

1) பி.சா.ஆ.6 வில்லங்க சான்றிதழில் நான்கெல்லை எதுவும் குறிப்பிடவில்லை என்றால் சரிதான். நான் கிரையம் பெற்றதாக சொல்லும் ஸ்ரீரங்கம் சார்பதிவக ஆவண எண்.3991/1980 ற்கும், பி.சா.ஆ.6 வில்லங்க சான்றிதழுக்கும் எவ்வித சம்மந்தமும் இல்லை என்றால் சரியல்ல. பி.சா.ஆ.7 புல வரைபடத்தில் எவ்வித தவறும் இல்லை என்றாலும், சரியானது என்றாலும் சரிதான்.

2) புல எண்.172/24 க்கு மேல்புறம் தடநடைபாதை உள்ளதாக பி.சா.ஆ.7 ல் கோடு கோடாக காட்டப்பட்டுள்ளது என்றால் சரிதான், அதில் தற்பொழுது தார்ரோடு போட்டுக்கொண்டிருக்கிறார்கள். புலவரைபடத்தில் குடியிருப்பு பகுதி இருந்தால் அதை காண்பிக்க பெட்டி வடிவத்தில் படம் காட்டப்படும் என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. புல எண்.172/24 காலிமனை என்பதால் தான் எந்தவிதமான கட்டுமானமும் காட்டப்படாமல், அளவுகள் மட்டும் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான், ஆனால் பூமியில் கட்டுமானமும், காலிமனையும் உள்ளது.

3) பி.சா.ஆ.7 புலவரைபடத்தை 2017 ல் வாங்கும்பொழுதே அது காலிமனை என்று ஏற்றுக்கொண்டு அதனை நான் பெற்றுள்ளேன் என்றால் சரிதான். 2017 ல் பி.சா.ஆ.7 புலவரைபடத்தை நான் பெற்றுள்ள போதிலும், அதனை 2026 ல் தற்போது தாக்கல் செய்துள்ளதால் அது காலிமனை என்று நான் ஏற்றுக்கொண்டுள்ளேன் என்றால் சரியல்ல. இவ்வழக்கு தாக்கல் செய்த 2018 ல் இருந்து தற்போது வரை புல

எண்.172/24 ல் கட்டுமானம் உள்ளதை காட்ட அதில் குறி போடும்மாறு நிலஅளவையர் துறைக்கு நான் எவ்வித மனுவும் கொடுக்கவில்லை என்றால் சரிதான்.

4) பி.சா.ஆ.7 புல வரைபடம் சரியாக உள்ளதால் தான் அதனை பொறுத்து, நிலஅளவையர் துறைக்கு நான் மேற்சொன்னவாறு எவ்வித மனுவும் கொடுக்கவில்லை என்றால் சரியல்ல. வழக்கு சொத்து தற்போது வரை காலிமனையாக உள்ளது என்றாலும், பி.சா.ஆ.7 புலவரைபடத்தை பொறுத்து அது உண்மை என்றாலும் சரியல்ல. பி.சா.ஆ.8 மற்றும் 9 திருச்சி அரசு மருத்துவமனை விடுப்பு அறிக்கைகள் தொடர்பாக எனது முதல்விசாரணை பிரமாண வாக்குமூலத்தில் குறிப்பிடாததற்கு எவ்வித காரணமும் இல்லை என்றால் இல்லை.

5) என்னை சுமார் 4 மாதங்களுக்கு முன்பு குறுக்குவிசாரணை செய்த பிறகு தற்போது மேற்படி ஆவணங்களை நான் உற்பத்தி செய்து தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. பி.சா.ஆ.8 ஆவணத்தில் எந்த மருத்துவமனையில் வழங்கப்பட்டுள்ளது என்ற குறிப்பு இல்லை என்றால் சரியல்ல. பி.சா.ஆ.9 ஆவணத்தில் எந்த மருத்துவமனையில் வழங்கப்பட்டுள்ளது என்ற குறிப்பு இல்லை என்றால் எனக்கு படிக்க தெரியாது.

6) பி.சா.ஆ.9 ல் கண்ட பெரியசாமி மற்றும் பி.சா.ஆ.8 ல் கண்ட கோகிலா ஆகியோர் யார் என்றால் எனது மகன் மற்றும் மருமகள். மேற்படி கோகிலா மற்றும் பெரியசாமியை விசாரித்தால் பி.சா.ஆ.8, 9 ஆவணங்களில் உள்ள உண்மைதன்மை தெரியவரும் என்றால் சரிதான். பி.சா.ஆ.8, 9 ஆவணங்களுக்கும் எனக்கும் எவ்வித தொடர்பும் இல்லை

என்றாலும், மேற்படி ஆவணங்களுக்கும் இவ்வழக்கில் எவ்வித தொடர்பும் இல்லை என்றாலும் சரியல்ல. இவ்வழக்கில் என்மீது பரிதாபம் ஏற்படவேண்டும் என்பதற்காக பி.சா.ஆ.8, 9 ஆவணங்களை நானே உற்பத்தி செய்து தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல.

7) பி.சா.ஆ.8, 9 ஆவணங்களை பொறுத்து காவல்துறையில் முதல்தகவல் அறிக்கை பதிவு செய்யப்படவில்லை என்றாலும், நீதிமன்றத்தில் தனிப்பட்ட புகாரோ அளிக்கப்படவில்லை என்றாலும் சரிதான். உண்மையில் பி.சா.ஆ.8, 9 ஆவணங்கள் தொடர்பாக நான் சொல்வது போல் சம்பவம் ஏதேனும் நடைபெற்றிருந்து அது உண்மையாக இருந்தால், காவல்துறையில் முதல்தகவல் அறிக்கை பதிவு செய்திருப்பார்கள் என்றாலும், அவ்வாறு முதல்தகவல் அறிக்கை பதிவு செய்யப்படவில்லை என்றால் அதனை பொறுத்து நீதிமன்றத்தில் தனிப்புகார் அளித்திருப்பேன் என்றாலும் சரியல்ல.

8) என்னை 07.02.2025ல் முதலில் குறுக்குவிசாரணை செய்த பிறகு, பி.சா.ஆ.10 ஆவணத்தை நானே உற்பத்தி செய்து தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. பி.சா.ஆ.10 புகார் மற்றும் புகார் மனு ரசீதில் என்ன சர்வே எண் என்று குறிப்பிடப்படவில்லை என்றால் சரிதான். பி.சா.ஆ.10 புகார் மனுவிற்கும், தாவா சொத்திற்கும் சம்மந்தமில்லை என்றால் சரியல்ல.

(வழக்கு குறுக்கு விசாரணை தொடர்ச்சிக்காக ஒத்திவைக்கப்படுகிறது)